DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 127/2022 |
| Deposition of Witness for | : | P.W. |
| | : | D.W. |
| | : | R.W.1 |
| | : | Court. |
| Name | : | வெங்கடேஷ் |
| Father's Name | : | திருப்பதி ராஜா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.07.2025

**முதல் விசாரணை:**

நான் 3 எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கிற்க்காக எனது நிறுவனத்தின் புலனாய்வு அதிகாரி கொடுத்த அறிக்கையை எ.ம.சா.ஆ 1 ஆக தாக்கல் செய்கிறேன். இவ்வழக்கில் விபத்தில் இறந்தவர் பெயர் சிதம்பரம். இறந்த போது சிதம்பரத்தின் வயது என்ன என்பதை நிருபிக்கும் பொருட்டு எ.ம.சா.ஆ 1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்தவரின் ஆதார் அடையாள அட்டை அதில் அவரது வயதை நிருபிக்க இணைக்கப்பட்டுள்ளது, அதில் அவரது வயது 84 என காட்டப்பட்டுள்ளது. மேலும் பிரேத பரிசோதனை அறிக்கையும் அதில் இணைக்கப்பட்டுள்ளது, அதில் இறந்தவரின் வயது 70 என குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவின் படி இந்த வழக்கில் அவருக்கு இழப்பீடு வழங்கப்படும் அவரது வயது 70 ற்கு மேல் என கணக்கிட்டு வழங்க வேண்டுமாய் மேற்கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்த ஆவணத்தில் இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழில் இறந்தவரின் வயது 65 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணத்தில் மனைவி வள்ளியின் ஆதார் அட்டையில் வயது என்ன உள்ளது என்றால் 17.12.1962 என உள்ளது. இறந்த போனவரின் உண்மையான வயது 65 வயதுதான் என்றும் இழப்பீடு குறைத்து கொடுக்க வேண்டும் என்பதற்காக ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.